**வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 21 இல் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

ஆயுள்வேத நன்கொடை ரூபா 43,700 பெறப்பட்டிருக்க கடந்த 14 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நேர் முன்னைய வருடத்தில் வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 174,673 நாளதுவரை செலுத்தப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பதவி விலகிய மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற 06 உத்தியோகத்தர்களுக்கு மீளளிக்கப்பட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 20,000 பிணைப் பணவைப்புக்கள் மீளளிக்கப்படாது கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்தும் வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை**

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

ரூபா 4,473,906 கூட்டுமொத்தமான ஆறு விடயங்களை தேவையான தகவல்கள் கிடைக்கப்பெறாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.3. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி நிர்வாக விதிகள் | | |
| (i) விதி 217 | - | சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 153 | - | வருமதிகளின் கூற்று பிரதேச சபை படிவத்தில் தயாரிக்கப்படவில்லை. |
| (iii) விதி 60 | - | வருட ஆரம்பத்தில் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழில்நிறுவனங்களின் விபரம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) விதி 165 | - | பிரதான ஏட்டில் பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பன பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 1646 | - | மாதாந்த வாகன ஓட்ட அட்டவணை மற்றும் பொழிப்பு தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்கு விதி 571 | 34,420 | கூட்டுமொத்தம் ரூபா 34,420 பெறுமதியான 03 காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் |

கடந்த ஒன்று தொடக்கம் மூன்று ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை 2016 திசெம்பர் 29 இன் 30/2016 ஆம் இலக்கம் - வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

---------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 12,955,022 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 4,202,522 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

--------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறானமொத்தநிலுவைகள்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள்** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) | வாடகைகள் | 8,076,210 | - | 8,454,332 | - | 9,361,840 | - | 9,235,531 | 126,309 |
| (ii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 976,550 | - | 789,325 | 187,225 | 621,000 | - | 706,966 | |
| (iii) | ஏனைய வருமானம் | 24,681,987 | - | 13,160,663 | 11,521,323 | 14,332,895 | - | 9,548,542 | 6,153,597 |

#### 2.2.2 வாடகை

----------

குத்தகை நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 28,750 கடந்த 21 வருடங்களாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 1,903,319 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,655,937 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

**2.2.4 ஏனைய வருமானம்**

சபைக்கு சொந்தமான ஜே.சி.பி, மோட்டார்கிரேடர் மற்றும் மோட்டார் றோலர் என்பவற்றினை வாடகைக்கு வழங்கியிருந்தமை தொடர்பில் அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 138,165 கடந்த 05 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**(அ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- (i) குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.
- (ii) சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை.
- (iii) குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.
- (iv) சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டுவரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- (v) கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.
- (vi) கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை.
- (vii) திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயற்திட்டக் காலதாமதம்**

சபையினால் கூட்டுமொத்தம் ரூபா 710,510 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு இரண்டு வழங்குனர்களுக்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த இரண்டு ஒப்பந்த வேலைகளுக்காக கூட்டுமொத்தம் ரூபா 49,760 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் வேலைகள் கடந்த எட்டு தொடக்கம் பன்னிரண்டு மாதங்களாக முடிவுறுத்தப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.2.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

நேர் முன்னைய ஆண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டுச் சபைபயினால் பாவனையிலீடுபடுத்தப்பட முடியாதவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுக் குறிப்பிடப்பட்ட 503 இருப்புப் பொருட்கள் தொடர்பாக 2009 நொவெம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைய நாளதுவரை சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 கையளிக்கப்படாத சொத்துக்கள்

சபைக்குரித்தற்ற 06 வாகனங்கள் கடந்த 03 ஆண்டுகளுக்கு மேலாக சபையினால் உபயோகிக்கப்பட்டு வந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே பாதகமான ரூபா 4,377,873 தொடக்கம் சாதகமான ரூபா 378,122 வரை அல்லது 15.76 சதவீதம் தொடக்கம் 4.68 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே பாதகமான ரூபா 173,458 தொடக்கம் சாதகமான ரூபா 4,674,801 வரை அல்லது 5.12 சதவீதம் தொடக்கம் 16.42 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) சொத்துக்கள்/ ஆதனம் | (i) பதிவுசெய்யத் தவறியமை.<br>(ii) பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கு தவறியமை. |
| (ஆ) இருப்புக்கள் | (i) பொருள் இருப்புப் பதிவேட்டில் பதிவுசெய்யத் தவறியமை.<br>(ii) முறையற்ற இருப்புக்கள் கட்டுப்பாடு. |
| (இ) செயற்திட்டங்கள்/ ஒப்பந்தங்கள் | (i) உடன்படிக்கைகளினை ஏற்படுத்திக்கொள்ள தவறியமை<br>(ii) போதியளவு மேற்பார்வை காணப்படாமை |